# டெல்டா குறுவை சாகுபடித் திட்டம் முறையாக சென்றடைய அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை,ஜூன்.15-

டெல்டா மாவட்ட உழவர்களின் நலன் கருதி, டெல்டா குறுவை சாகுபடிச் சிறப்புத் திட்டம் அறிவிறித்துள்ளோம் எனவும், இத்திட்டத்தின் பயன் முறையாக உழவர் பெரு மக்களுக்குச் சென்று சேர்வதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

டெல்டா குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் 2024 - ஐ யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:

**பருவமழை தாமதமாகி வருவதால் டெல்டா மாவட்ட உழவர்களின் நலன் பாதிப்படையக் கூடாதென டெல்டா குறுவை சாகுபடிச் சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளோம்.**

**இத்திட்டத்தின் பயன் முறையாகச் சென்று சேர்வதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.6.2024) சென்னையில் நடைபெற்ற நடிகர் அர்ஜுனின் மகள் ஐஸ்வர்யா அர்ஜுன் மற்றும் நடிகர் தம்பி ராமையாவின் மகன் உமாபதி ராமையா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



மக்களவைத் தேர்தல் 2024ன் போது முதலமைச்சர் அவர்கள், கோவையில் சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் அமைக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார்கள். இந்நிலையில், கோவையில் சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் அமைப்பதற்கு ஏற்புடைய இடத்தை தேர்வு செய்வதற்கான முதற்கட்டப் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.06.2024) பார்வையிட்டு கோவை ஒண்டிப்புதூரில் சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என நேற்று நேரில் ஆய்வு செய்து, தொழில்துறையில் சிறந்து விளங்கும் கோவை மாநகரம், விளையாட்டுத் துறையிலும் உலகமே உற்று நோக்குகிற வகையில் மேலும் உயர்வதை உறுதி செய்வோம் எனக் குறிப்பிட்டார். உடன் அமைச்சர்கள் சு.முத்துசாமி, டி.ஆர்.பி. ராஜா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.6.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் தாகூர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர்.



கோவையைச் சேர்ந்த தடகள வீராங்கனை நௌஷீன் பானுசந்த், 71வது டென்சிங் ஹிலாரி மவுண்ட் எவரெஸ்ட் சர்வதேச மாரத்தான் போட்டியில் பங்கேற்று 42 கிலோமீட்டர் தூரத்தை 10 மணிநேரம் 30 நிமிடங்களில் கடந்து வெற்றி பெற்றுள்ளார். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம் நிதியுதவி பெற்று இப்போட்டியில் பங்கேற்ற நௌஷீன் பானுசந்த், வெற்றிக்கான சான்றிதழ் மற்றும் கேடயத்தை கோவையில் நேற்று (14.06.2024) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். தொடர்ந்து பல்வேறு வெற்றிகளை குவித்து, தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தருமாறு அவரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்.

### மானியக் கோரிக்கை தொடர்பாக குறு, சிறு - நடுத்தர

# தொழில் நிறுவன சங்கப் பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்புக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்!

சென்னை, ஜூன் 15-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் 2024-25 மானிய கோரிக்கை தொடர்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கப் பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நேற்று (14.06.2024) கிண்டி, சிட்கோ தலைமை அலுவலகத்தில் 2024-25 - ஆம் ஆண்டுக்கான மானிய கோரிக்கை தொடர்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கப் பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

கருத்துக் கேட்புக் கூட்டத்தில் தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில்கள் சங்கம், (TANSTIA), அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (AIEMA), தலித் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை (DICCI), தோல் ஏற்றுமதி கவுன்சில் (CLE) கான்படெரேஷன் ஆஃப் அஃபர்மேட்டிவ் இண்டஸ்ட்ரீஸ் (CAI), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA), மதுரை மாவட்ட சிறு மற்றும் குறு தொழில்கள் சங்கம் (MADITSSIA), திருச்சி மாவட்ட சிறு மற்றும் குறு தொழில்கள் சங்கம் மற்றும் ஆதிதிராவிடர் வர்த்தகம் மற்றும் தொழில் தொலைநோக்கு பேரமைப்பு (ACTIV) ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாக, புதிய சிட்கோ தொழிற்பேட்டை கோரிக்கைகள், GST ஆலோசகர்கள் நியமனம், SC/ST கொள்முதல் கொள்கை, குறு மற்றும் சிறு வசதியாக்கல் குழுமங்கள், தொழிற்பேட்டை உள்கட்டமைப்பு மேம்படுத்துதல், தொழிலை நவீனப்படுத்த மானியம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழிலாளர்களுக்கு பயிற்சி மானியம், சிட்கோ, தொழிற்பேட்டைகளுக்கு பேருந்து வசதி, SC/ST தொழில்முனைவோர்களுக்கு சிட்கோ தொழில்மனை ஒதுக்கீடு அதிகரித்தல், நில வகைகளை தொழில் மனைகளாக பெயர் மாற்றம் செய்வது, இணையதள சேவைகள் மேம்படுத்துதல் என பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர்.

தொழிற்கூட்டமைப்பினர் தெரிவித்த கருத்துக்களை கேட்டறிந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவற்றை தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், திருமதி சோ.மதுமதி, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் இல. நிர்மல் ராஜ், கூடுதல் ஆணையர் திருமதி கிரேஸ் பச்சாவ், சேகோசர்வ் மேலாண்மை இயக்குனர் லலித் ஆதித்யா நீலம், உயர் அரசு அலுவலர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கப் பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.

### ‘நீட்’ குளறுபடி:

# தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜூன் 15-

நீட் தேர்வு குளறுபடி குறித்து சி.பி.ஐ. விசாரணை கோரிய மனுவுக்கு பதிலளிக்கும்படி தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மே மாதம் நடைபெற்ற நீட் தேர்வில் கேள்வித்தாள் கசிவு, குறிப்பிட்ட தேர்வு மையங்களை ஒதுக்கி முறைகேடு நடத்தப்பட்டது அம்பலமானது. குஜராத், பீகார், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் நீட் தேர்வில் மிகப்பெரிய மோசடி நடந்துள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கர்நாடகா, ஜார்கண்ட், ஒடிசா மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர், குஜராத் கோத்ரா மையத்தை தேர்ந்தெடுத்து தேர்வு எழுதியதும் அம்பலமானது. 1000 கிலோ மீட்டர் தாண்டி குறிப்பிட்ட சில மாணவர்கள், ஏன் கோத்ரா தேர்வு மையத்தை தேர்வு செய்தார்கள் என்ற கேள்வி எழுந்தது.

மாணவர்களிடம் தலா 10 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள கோத்ரா தேர்வு மையம் ஒதுக்கப்பட்டது விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

இதுதவிர, பீகாரில் குறிப்பிட்ட தேர்வு மையத்தில் கேள்வித்தாள் கசிந்தது தொடர்பாக 3 மாணவர்கள் உட்பட 13 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பீகாரில் வினாத்தாள் கசிந்த விவகாரத்தில் பல லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டதும் அம்பலமானது.

நீட் முறைகேடு தொடர்பாக பல இடங்களில் வழக்குப்பதிவு செய்யப்பட்டாலும் விசாரணையில் போதிய முன்னேற்றம் இல்லாமல் உள்ளது. இந்நிலையில், நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைகோரி உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், நீட் தேர்வு முறைகேட்டில் பல கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் குற்றம் சாட்டப் பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், இந்த விவகாரத்தில் பதிலளிக்கும்படி தேசிய தேர்வு முகமைக்கு உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை ஜூலை 8-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

### எம்.பி.ஆர்.ராஜன் ஏற்பாடு! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. முன்னிலை!

# 47 (அ) வட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்! நலஉதவிகள்!

## வீ.மதிமாறன் சிறப்புரை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜூன் 15-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 47(அ) வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாளை (16.06.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பாரதிநகர் மெயின்தெரு, கொருக்குபேட்டையில் நடைபெறுகிறது.

47(அ) வட்ட செயலாளர் எம்.பி.ஆர்.ராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்துள்ளார்.

வட்ட நிர்வாகிகள் : பாலு(எ) முகம்மதுஅலி, ரா.சீனிவாசன், ரா.ராபர்ட், ஜெ.அருணா, க.முருகன், மு.குமரன், ஜி.என்.ராகவேந்திரா, க.சுந்தரராஜன், பெ.வெங்கடேசன், பி.ஜக்கரய்யா, எஸ்.தமிழரசு, எஸ்.பாஸ்கர், ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், தலைமை வகிக்கிறார்.ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், திராவிட செல்வி, பி.சீனிவாசன், கே.பி.சதிஷ்குமார், டாக்டர். வை.கலைவாணன்,ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், எஸ்.சொக்கலிங்கம், த.வேதாச்சலம், மீஞ்சூர். முகுந்தன், ஜி.ராஜா, எஸ்.கென்னடி, கே.ஜானகிராமன், ஜி.ஏழுமலை, எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், இக்கூட்டத்தில் திராவிட இயக்க பேச்சாளர் வீ.மதிமாறன் சிறப்புரை யாற்றுகிறார்.மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

நந்தனம் நம்பிராஜன், இரா.லட்சுமணன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏ.மணிமேகலை எம்.சி, இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், டி.சங்கர், கே.அருண்குமார், டி.கே.ரத்தினகுமார், என்.பி.அஜித், என்.சுப்புராயன், என்.சுசிலா, எம்.பானு, எ.விஜயன், சி.செஞ்சம்மா, மு.ரவிச்சந்திரன், பெ.ராம்குமார், எம்.தேவராஜ் தியாகு, ஜெ.கண்ணியம்மாள், ஸ்டீல் எ.மோகன், எம்.சாமி, எம்.வீரத்திலகம், எஸ்.லட்சுமணன், டைகர் பி.எஸ்.வீரா, எ.அமுலு, எ.ஜெபகுமாரி, எஸ்.எ. சுலோச்சனா, எஸ்.நூரி, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

க.முருகன், ஆர்.ராபர்ட், எ.அருணா, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கொளத்தூர் மேற்கு பகுதி - 64 வது வட்டக் கழகச் செயலாளர்

# எஸ்.முருகன் இல்லத் திருமண விழா : அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

## பிரியா ராஜன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - கழகத்தினர் வாழ்த்து!



சென்னை, ஜூன். 15-

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதி, 64 வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.முருகன் - எம்.ஜெயலஷ்மி ஆகியோரின் புதல்வர் எம்.செல்வபிரபுவிற்கும், வில்லிவாக்கம், (நினைவில் வாழும்) கே. பழனி ராமகிருஷ்ணன் - பி.சாந்தி ஆகியோரின் புதல்வி பி.ஸ்ரீதேவிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (15.6.2024 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு மேல், சென்னை, கொரட்டூர், அக்ரஹாரம், 100 அடி சாலை, அன்னை நகரில் உள்ள மோகன் கார்டன் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண வரவேற்பு விழாவில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி விராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், எ.நாகராசன், ஐ.சி.எப்.வ. முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார்,

சங்கரி நாராயணன், கவிஞர் நன்மாறன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, எஸ்.மணிமுடி, எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி, வே.உமாகாந்த், இந்திரஜித், ஆர்.வரதன், கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், கூ.பீ.ஜெயின், ஸ்ரீராமுலு, சொ.வேலு, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.இராஜகோபால், செ .தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, வி.சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி உத்திரமேர் ஊராட்சி ஒன்றியம் நெல்வாய் கூட்ரோடு முதல் காஞ்சிபுரம் வரை மற்றும் குண்ணவாக்கம் முதல் வாடாதவூர் வரை பேருந்து இரண்டு வழித்தடங்களை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார் உடன் ஒன்றிய செயலாளர் டி.குமார், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி அமுதா தமிழ்வேந்தன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர் நதியா கோபி, துணை செயலாளர் தமிழ் வேந்தன், பொருளாளர் பாலமுருகன், மற்றும் கார்த்திகேயன் வெங்கட்ராமன், முனுசாமி, செயல் அறிஞன், சீனிவாசன் குட்டி, ரத்தினமாலா, லோகநாதன், பாபு கோபால் விஷ்ணு முரளி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “காலம் உள்ளவரை கலைஞர்” கலைஞர் 100 – 93வது நிகழ்ச்சியாக ”தூய்மைப் பணியாளர் உயரட்டும் சூரியப் பாதையில் தொடரட்டும் எனும் தலைப்பில் நேற்று (14.6.2024) சென்னை, எழும்பூர், சிராஜ் மஹாலில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.சாவித்திரி வீரராகவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், மண்டலக் குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு, திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.